உ

சிவமயம்.

செட்டிக்குமரன் துணை.

PADHYAYA
IYER LIBRARY

நிஜவைசிய நிரூபணமும், போலிவைசிய கண்டனமும்.

இவை

வைசியகுல ஆயிரவர்களி லொருவராகிய,

ஓங்கூர் - சி. இரத்தின செட்டியார்

அவர்களால்

வெளியிடப்பட்டன.

1931

உ

சிவமயம்.

செட்டிக்குமரன் துணை.

நிஜவைசிய நிரூபணமும், போலிவைசிய கண்டனமும்.

திருச்சிற்றம்பலம்.

ஒட்டியாட் கொண்டுபோ யொளித்திட்ட
வுச்சிப் போதனை நச்சரவார்த்த
பட்டியைப் பகலை யிருடன்னைப்
பாவிப்பார் மனத்தூறு மத்தேனைக்
கட்டியைக் கரும்பின் றெளிதன்னைக்
காதலாற் கடற்சூர் தடிந்திட்ட
செட்டி யப்பனைப் பட்டனைச் செல்வ
வாரூரானை மறக்கலு மாமே.

[சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் - பண். தக்கேசி.]

திருச்சிற்றம்பலம்.

1. நாளது பிரஜோத்பத்திஸூ ஆவணிமீ 14உ சென்னை முத்தியாலுப்பேட்டை நபினியப்பன் வீதியில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ வல்லீதேவ சேனா சமேத ஸ்ரீ முத்துக்குமர வேளின் கும்பாபிஷேக சம்பந்தமாக வெளியிட்ட பத்திரிகையில், **வாணியர்கள்**, தாங்கள் வைசியரென்றும், வக்குவ மரபினர் என்றும், ஆயிரங் கோத்திரத்தவர் என்றும், தசாங்க விருதுடையவரென்றும்

இன்னுமிவை போன்ற எங்களுக்குரிய பெருமைகளை யெல்லாம் தங்களுக்குரியவைகள் என்று எழுதிக்கொண்டதைப் பார்த்து மனம் சகியாது, நான் "நிஜவைசிய நிரூபணம்" என்ற தலைப்புடன் ஒரு பத்திரிகையை யெழுதினேன். அதில் உண்மையான வைசியர் யாரென்றும், வாணியர் வைசியர் அல்லவென்றும் தக்க ஆதாரங்களைக் காட்டி நிரூபித்திருக்கிறேன்.

2. இதற்குப் பதிலாக வைசியரல்லாத வாணியர்கள், என் பத்திரிகையில் எடுத்துக்காட்டியிருக்கும் ஆதாரங்களை மறுக்கச் சக்தியற்றும், வேறு தங்களுக்குரிய ஆதாரமான நூல்களைக் காட்டாமலும், வாயில் வந்தபடியெல்லாம் பிதற்றிப் பல கையெழுத்துகளுடன் பல பத்திரிகைகளை யெழுதி வெளியிட்டார்கள். அவைகளையெல்லாம் நான் பார்த்தும், அவைகளுக்குப் பதில் எழுதக்கூடிய அவ்வளவு யோக்யதை யவைகளிடத்தில் இல்லாததால் அவற்றை யலக்ஷ்யமாய்த் தள்ளிவிட்டேன். ஏனெனில், அவைகளில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்கள் எல்லாம் நியாயத்திற்கு விரோதமாகவும், சாஸ்திரங்களுக்குப் பொருத்தமில்லாதவைகளாகவும், உலக அனுபவத்திற்கு மாறுகவு மிருப்பதால் அவைகளுக்குப் பொருத்தமான பதில்களையெழுதி அவர்களைத் திருப்தி செய்யவாவது நல்ல வழிக்குக் கொண்டுவரவாவது முடியாது. ஆயினும் அவசியம்பற்றி அவைகளில் கண்டுள்ள சிற்சில விஷயங்களுக்குப் பதில் ஒரு சிறிது கூறுகிறேன். உண்மை எவ்விடத்திலும், எக்காலத்திலும் நிலைபெறுமாதலால் வைசியரது இயற்கைப் பெருமையையும், வாணியரது போலிப்பெருமையையும் விளக்கிக்காட்டி, வீண்வார்த்தைகளைப் பேசிக்கொண்டும், சாரமில்லாத பத்திரிகைகளை எழுதி வெளியிட்டுக்கொண்டும் வாய் ஜம்பம் பேசிக்கொள்ளும் வாணியர்களது வாயை யடக்குவேன்.

3. நான் திண்டிவனத்தைவிட்டு இவ்விடம் வந்ததன் காரணம் "வயிறு வளர்ப்பதற்கு அல்ல". பிழைக்கச் சென்னைக்கு வந்தேன் என்றும் நினைக்கவேண்டாம். நான்

சென்னைக்குவந்து சுமார் 4 வருஷ காலமாகியும் நான் எந்த வேலையையும் பார்த்ததில்லை; பார்க்கிறதில்லை; இனிப் பார்க்கப்போவதுமில்லை யென்று திட்டமாய் அறியுங்கள். பிறகு எதற்காகச் சென்னைக்குவந்தது என்றால், வைசியரல்லாத வாணியர்கள் தங்களை வைசியர்கள் என்று சொல்ல முன்வந்ததைக் கண்டித்து எமது வைசிய குலத்தை நிரூபிக்கத்தான் என்றறியுங்கள். நான் உபாத்யாயர், உபாத்யாயர்தான். எனக்குத் திவாகரம், நிகண்டுக்குமேல் ஒன்றுந் தெரியாதென் றெழுதினீர்கள். உங்கள் ஞானம் எவ்வளவுமட்டும் சென்றது என்றதைப் பார்க்க எனக்கு ஆச்சரியமும், பரிதாபமு மேற்படுகின்றன. நீங்கள் சாமானியமெனக் கருதும் நூல்களிலிருந்து நான் என் பத்திரிகையில் எடுத்தாண்ட மேற்கோள்களை மறுத்துக் கூற உங்களால் இன்னும் முடியவில்லை. நீங்கள் ஏன் வேறு நூல்களுக்குச் செல்லவேண்டும்? **வணிகர், வாணிகர், வாணியர்** என்று மாறியிருப்பதாக எழுதியிருக்கிறீர் இதற்கு இலக்கண ஆதாரம் கூற முடியுமா? சமயத்திற்கேற்றவாறு பொருள்கொள்வீராகில் அது நியாயத்திற்குப் பொருந்துமா? **சேக்கார்** என்பவர், தனி ஜாதியார் என்றும், அவர்கள் தென்னாடுகளில் சேலம், ஈரோடு, தர்மபுரி முதலிய பலவிடங்களிலிருக்கிறார்கள் என்றும் ஏன் உங்களினத்தவரைப் பிரித்துப் பேசத் துணிந்தீர்கள்? சென்ற சில மாதங்களுக்கு முன் நடந்த வேதாரண்ய ஆலயப்ரவேச வழக்கில் வாதிகளாகிய உங்களினத்தவர் "தாங்கள் வைசியகுலத்தைச்சேர்ந்த **வாணி**யசெட்டி ஜாதியாரென்றும், தங்களுக்கு ஒரு புராணமிருக்கிறதென்றும், தாங்கள் சகஸ்த்ர கோத்திரத்தவரென்றும் மூன்றாவது வருணமாகிற வைசியமரபைச்சேர்ந்தவ"ரென்றும் வாக்குமூலம் கொடுத்திருக்க அதை நீங்கள் அறியாது அவரைச் சேக்கார் என்று வேறு பிரித்துக் கூறப்புகுந்தது உங்கள் அறியாமையை நன்கு புலப்படுத்துகிறது!

4. இனிச் செட்டி யென்றபதம் இயற்கைப்பெயரென்றும், அது மூன்றாங்குடித்தலைவரும் வைசியருமாகிய எம்ம

ஞோர்க்குச் சொந்தமாகிய பெயரென்றுந் தெரிந்துகொள்ளும். அது தனித்து நின்று எம் குலத்தையே விளக்கும் என்று தெளிவாய் உணர்ந்துகொள்ளுங்கள். எப்படியெனில் ஒரு உதாரணங் கூறுகிறேன். "பூவிற்குத் தாமரையே" என நச்சினுர்க்கினியர் எழுதியதைக்காண்க. 'பூ' என்னும் சொல்லானது பொதுவாக எல்லாப் புஷ்பங்களையுமுணர்த்தியபோதிலும் சிறப்பாகத் தாமரையையேயுணர்த்துமென்பது உமக்குத் தெரியாதா? அதுபோல செட்டி என்கிறபதம் பொதுவாக அடைமொழிகளைச் சேர்த்து வைசியரல்லாத மற்ற ஜாதியரை யுணர்த்தியபோதிலும், தனித்து நிற்கும்போது சிறப்பாக வணிக வைசியராகிய எம்மையே யுணர்த்தா நிற்குமென்றறியுங்கள். இன்னும் வணிக வைசியராகிய எங்கள் குலத்தில் அச்சிறுபாக்கத்து வகுப்பு, பூவிருந்தவல்லி வகுப்பு, காசுக்கார வகுப்பு இன்னும் இவைபோன்ற பிறவுமான 18 வகுப்புக்களுண்டு. இவர்களெல்லோரும் **வணிக வைசிய ஆயிரவரே.**

5. எங்கள் குலத்தில் பல வித்வான்கள் இருந்தார்கள் என்றும், இருக்கிறுர்கள் என்றும், பல்லாண்டுகளாக அநேக பத்திரிகைகள் நடைபெற்றன வென்றும், பல மகாநாடுகள் கூடினவென்றும், சங்கங்கள் சேர்ந்தனவென்றும், வாய்ப்பறை யறைந்திருக்கிறீர்கள். அப் பத்திரிகைகள் இப்போது எங்கே போயின? மகாநாடுகள் ஏன் நின்றுவிட்டன? சங்கங்கள் ஏன் சேரவில்லை? எங்கள் மரபின் அபிவிருத்தியைக் கருதி எம்மவர்கள், நெரிஞ்சிப்பேட்டையிலும், சேலத்திலும், மதுரையிலும் நாளதுவரையிலும் வருஷந்தோறும் மகாநாடுகள் நடத்தி வருவதையறிவீர்களா? இது உலகப்பிரசித்தமான விஷயம். தக்க வித்வான்கள் இருந்தால், அவர்கள் உங்களால் வெளியிடப்பட்டுள்ள தாறுமாறுன பத்திரிகைகளை யொப்புவார்களா? ஆதலாற்றுன் அவைகளை படித்துப்பார்த்தால் நான்பதில் எழுதக்கூடிய நல்ல விஷயம் ஒன்றும் காணமுடியவில்லை. நிற்க.

6. இனி, நீங்கள் பல விடங்களிலும் பல க்ஷேத்ரங்களிலும் பல உற்சவங்களைச் செய்து வருவதாக மிக விமரிசயாக எழுதி விட்டீர்கள்! வணிக வைசிய ஆயிரவர்களாகிய எம்மவர் வடக்கே இமயமலை முதல் தெற்கே கன்னியாகுமரிவரை கிழக்கு மேற்கில் இரண்டு சமுத்ரங்கள் எல்லை வரையிலுமுள்ள சிவ, விஷ்ணு ஆலயங்களிலெல்லாம் செய்து வரும் உற்சவங்களை யெண்ணிப்பார்க்க முடியாதென்று அவைகளை விபரமாய் இங்குக் காட்டவில்லை. கங்கைக்கரையிலுள்ள மணலை யெண்ணினாலும் எண்ணலாம். நாங்கள் செய்து வரும் கோடிக்கணக்கான உற்சவங்களை யெண்ண முடியாது! இதைத் திட்டமாயறிந்தடங்குங்கள். இது விபரம், சேலம் ராசீபுரம் ஸ்ரீ S. பொன்முடி. பொன்னுசுவாமி செட்டியார் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ள நிஜவைசிய நிரூபணப் புத்தகத்தின் 17-வது பக்கத்தில் பரக்கக்காண்க. **பேரி** யென்பதற்கு முரசு என்று பொருளிருப்பது உண்மையே. அது எங்களுக்குத் தேவர்களால் கொடுக்கப்பட்ட தசாங்கங்களுள் ஒன்றாகிய பைந்நாகமுரசு. முரசையுடைய செட்டி அல்லது பேரிகை செட்டி என்பது பேரிசெட்டியென மருவி வழங்கிவருவதை நீங்கள் அறியமாட்டீர்களா? இது எங்கள் மரபிற்குரிய பல பெயர்களுள் ஒன்றாகவிருப்பதால் நூல்களில் இப்பதப்ரயோகஞ் செய்யப்படவில்லைபோலும்! அதனால் எங்கள் மரபு சாஸ்திரங்களில் கூறப்படவில்லையென்று நினைக்கக் கூடுமா? ஒருபோதும் முடியாதென்று தெரிந்துகொள்ளுங்கள். எங்கள் மரபினர் சென்னை ராஜதானியில் தெற்கில் 150 மைலுக்கப்புறம் இல்லையென்றெழுதியிருப்பதைப் பார்க்க ஆச்சரியமுண்டாகிறது. தென்னிந்தியாவில் (சென்னை முதல் திருநெல்வேலிவரை தெற்கிலும், கோயமுத்தூர்வரை மேற்கிலும் இன்னும் அநேகவிடங்களிலும்) எங்கள் மரபினர் வசித்துவருவது யாவருமறிந்த ஒரு பிரசித்தமான விஷயமாயிற்றே! இதை நீங்கள்மட்டும் ஏன் இன்னும் தெரிந்துகொள்ளாம லிருக்கிறீர்கள்? இனிப் பல விடங்களில் பலவீதிகள் உள்ளனவென்றும் தனியாகப்

பேரிசெட்டி வீதியென்று எங்குமில்லை யென்றீர்கள். செட்டி வீதியென்று சொன்னால் அது எம்மரபினராகிய வணிக வைசிய ஆயிரவர் வீதி யென்று பொருள்படுமே யொழிய, வைசியரல்லாத மற்ற ஜாதியாரைக் குறிக்காதென்று தெரிந்துகொள்ளுங்கள். செங்கல்பட்டு, வந்தவாசி, திண்டிவனம், கருங்குழி, பரங்கிமலை, கன்னம்புள்ளி, காஞ்சீபுரங்களில் **செட்டிவீதி** யென்றே தனிவீதிகளிருக்கின்றன வென்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். இவைகள் எம்மரபாரது வீதிகளேயொழிய மற்றஜாதியாரது வீதிகளல்லவென்பது விசாரித்தால் தெரிந்துகொள்ளலாம்.

7. இனி, ஜாதித்தொழிலைப்பற்றிச் சிறிது பேசுவாம். உம்மினத்தவர் ஒருவராகிய ஸ்ரீ ம. கோவிந்த செட்டியார் என்பவர், ஸ்ரீ கோ. ராஜகோபால் பிள்ளை என்னும் வித்வானுடைய உதவியைக் கொண்டு 1874-ம் வருஷத்தில் உம்மினத்தவர் நால்வர் வேண்டுகோளுக்கிணங்கி எங்கள் புராணத்தைப் புரட்டி எழுதிவைத்திருக்கும் போலி 'வைசிய புராணம்' என்ற நூல் ஒன்று இருக்கிறதென்று உங்களுக்குத் தெரியாதா?

[எங்கள் புராணத்தை எங்களினத்தவர் ஒருவர் சுமார் 75-வருடங்கட்கு முன் அச்சிட்டு வெளியிட்டிருக்க, அதைப்போல உங்களுக்கும் ஒரு புராணம் வேண்டுமென நினைத்து எங்கள் புராணத்தை யாதாரமாக வைத்துக் கொண்டு சில சருக்கங்களைச் சேர்த்தும், சிலவற்றை நீக்கியும், சில செய்யுட்களைப் புதிதாய்ச் சேர்த்தும், சிலவற்றை மாற்றியும் எழுதிவைத்துக் கொண்டதல்லவா உங்கள் புராணம்! எங்கள் வைசிய புராணத்தையும், சென்னை ஓரியெண்டல் மானஸ்கிரிப்ட் லைப்ரெரியிலுள்ள மிகப்புராதனமான ஓலையிலெழுதப்பட்டிருக்கும் வைசிய புராணத்தையும் ஒத்திட்டுப் பார்த்தால் எங்களது உண்மைப் புராணம் என்றும், உங்கள் புராணம் போலிப் புராணம் என்றும் உங்களுக்குத் தெரியவரும்]

8. உங்கள் புராணத்தில் வாணியராகிய உங்களுக்கு "விஷ்ணுமூர்த்தி தமது முதுகினழுக்கை யுருட்டி யெடுத்

துக் கொடுத்து, இது எள், இதைச் செக்கிலிட்டாட்டி எண்ணெய்கொண்டு அதை விளக்கிலிட்டுத் தீபமேற்றி யுலகிலுள்ள இருளைப் போக்குங்கள்" என்று 'தொழிலாதிகொடுத்த சருக்கத்தில்' முதலிரண்டு செய்யுட்களில் கூறப்பட்டிருப்பதைப் பார்க்க வில்லையா? எள்ளைச் செக்கிலிட்டு ஆட்டுவதும், எண்ணெய் உப்பு விற்பதும் பாவமான தொழில் என்றும் ஸ்மிருதிகளில் கூறியிருக்க உங்களினத்தவர் பெரும்பாலும் இன்றைக்கும், நாளைக்கும் செய்துவரும் செக்காடு தொழிலை மறைக்கமுடியுமா? முழுப்பூசணிக் காயைச் சோற்றோடு மறைக்கப் பார்க்கிறீர்களே? இது ஆச்சர்யத்திலும் ஆச்சரியமே!! இக்காலத்தில் ஏகதேசமாக இரண்டொருவர் எம்மினத்தவர் தம் வயிறு வளர்ப்பதற்காகக் கூலிக்குச் செக்காடு தொழிலை மேற்கொண்டுள்ளார்கள் என்று எழுதியிருக்கிறீர்கள். அது எம் ஜாதித் தொழிலாகுமா? அல்லது அவர்களால் எங்கள் குலம் வாணியக்குலமாய்விடுமா? அத்தொழில் அவர்களுக்கு ஜீவனத்தொழிலாகுமே யன்றி குலத்தொழிலாகுமா? இதை யறியாது வெகு அவசரமாக எங்கள் குலம் வாணியக்குலம் என்று எழுதிவிட்டீர்களே! இதனால் எங்களுக்கு வந்த இழுக்கென்னை? அது உங்கள் ஜாதித்தொழில் என்று பழைய நூல்களில் கூறியிருக்க, இப்போதும், அத் தொழிலைத்தவிர வேறு தொழிலைச் செய்யாதிருக்கும் போதே 'அது எம்குலத்தொழில் அல்ல, ஜீவனத் தொழில் என்று எழுத எப்படித் துணிந்தீர்கள்? உண்மை விளங்கவில்லையே! என் செய்வது!!

9. நாம் பேசுவது எல்லாம் முற்காலத்தில் எல்லா ஜாதியாருக்கும் உரிய தொழிலைப்பற்றியே யன்றி, ஜாதி முறை, தொழில்முறை தலைகீழாக மாறியிருக்கும் இக்காலத்தைப்பற்றி யல்லவென்பதை யுணர்ந்து கொள்ளுங்கள். சாஸ்திரங்களில், முன்னாட்களில் விதிக்கப்பட்ட தொழிலை யிப்போது எந்த ஜாதியார் செய்கிறார்கள்? தெரியுமா? எந்த முறை இந்தக்காலத்தில் தலைகீழாக மாறினாலும் அந்த **எள்ளையாட்டி எண்ணெய் விற்கும் தொழில்மட்டும்**

நாளைக்கும் உங்களைவிட்டு நீங்கவில்லையே!! உண்மையிப்படி யிருக்க எம்தொழில் செக்காடுதல் என்றும், எம்குலம் வாணியகுலம் என்றும் எமக்குச் "சக்கிரிகுலவைசியர்" என்ற நற்சாக்ஷிப் பத்திரத்தை யளிப்பதாகவும் வெகு ஜம்பமாக எழுதியிருக்கிறீர்களே? நற்சாக்ஷிப்பத்தி மென்றால் என்ன? அது யாரால் யாருக்குக் கொடுக் கப்படுவது? தெரியுமா? உயர்ந்தவர்கள் தம்மை விடத் தாழ்ந்தவரை யுயர்த்தி யுபசாரமாகக் கூறு வதுதானே அதன்பொருள். உயர்ந்த வைசியராகிய நாங்கள் உங்களுக்கு வேண்டுமென்றால் ஓர் நற்சாக்ஷிப் பத்திரம் பின்வருமாறு கொடுக்கிறோம். "நீங்கள் வாணி யர், வைசியரல்ல. உங்கள் ஜாதித்தொழில், ஜீவனத் தொழில் எண்ணெய், உப்பு, விற்பது," இவ்வளவோடு தான் நீங்கள் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கவேண்டும். குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளாதீர்கள்!

Mr. W. Thurston's Castes and Tribes of Southern India 1909, Vol. VII T-Z pp. 312-315. Mr. Francis: "The *Vaniyans* are oil presseres among the Tamils corresponding to the Telugu Gandlas, Canarese Ganigas, Malabar Chekkans and Oriya Tellis......in Tinnevelly they are not allowed to enter the temples. ....

Mr. H. A. Stuart: Census report 1891............... "were formerly called Sekkan (oil millmen).

Cochin census report 1901:........They are not permitted to touch the Konkani Tanks and wells...... According to the sastras, the crushing of gingelly seeds and sale of gingelly oil are sinful acts and no one who does not belong to the Vaniyan class will either express or sell gingelly oil (Manual of the Tanjore Dt.).

தமிழ்மொழி பெயர்ப்பு.

மிஸ்டர் W. தர்ஸ்டன் துரையவர்களால் 1909-ல் வெளியிடப்பட்டிருக்கும் தென்னிந்தியா ஜாதிகளும் வகுப்

புக்களும். 7-வது வால்யம் - பக்கம் 312-முதல் 315-வரை. மிஸ்டர் பிரான்ஸிஸ் துரைஎழுதுவது: "வாணியர் தமிழர்களுக்குள் எண்ணெய் ஆடுபவரென்றும், தெலுங்கர்களில் கண்ட்லர் என்றும், கன்னடத்தில் கணிகர் என்றும், மலையாளத்தில் செக்கான் என்றும் உரியாவில் தெள்ளி என்றும்...........திருநெல்வேலியில் இவர்களைக் கோயிலுக்குள் போகவிடுவதில்லை"

மிஸ்டர் H. A. ஸ்டூவர்ட்: சென்சஸ் ரிபோர்ட்டு 1891. ....முன்னர் செக்கான் (எண்ணெய் ஆடுபவர்) என்று கூறப்பட்டு வந்தார்கள்.

கொச்சின் சென்சஸ்ரிபோர்ட்டு: 1901........"வாணியர் கொங்கிணிகளது குளத்தையும் கிணற்றையுந் தொடவிட மாட்டார்கள்..........................சாஸ்திரங்களின்படி எள்ளைச் செக்கிலிட்டாட்டுவதும், எண்ணெய் விற்பதும் பாவமான தொழில்கள். இவைகளை வாணியரைத் தவிர வேறு எந்த வகுப்பினரும் செய்வதில்லை" (தஞ்சாவூர் ஜில்லா மான்யல்).

10. மிஸ்டர் H. A. ஸ்டூவர்ட் துரையவர்களால் 1909-ம் வருடத்தில் எழுதி வெளியிட்ட புஸ்தகத்தில் வாணியர்கள் சுமார் 50 அல்லது 60-வருடங்கட்கு முன்தான் பூணூல் போட்டுக்கொண்டார்கள் என்று எழுதப்பட்டிருப்பதற்கும், 57-வருடங்கட்குமுன் உங்களால் வெளியிடப்பட்டுள்ள உங்கள் போலிப் புராணத்தில், உங்களினத்தவராகிய ஸ்ரீ ம. கோவிந்த செட்டியாரால் சொந்தமாகப் பாடிச் சேர்க்கப்பட்ட புராண ஞான சிவாசாரியார் சருக்கத்திலும் உங்களுக்கு வெகுகாலம்வரை பூணூலில்லாதிருந்து அவரால் போடப்பட்டது என்றும் எழுதியிருப் பதற்கும் ஒற்றுமை காண்பதால் உங்களுக்கு வெகுகாலம் வரை பூணூல் இல்லாதிருந்ததாகத் தெரிய வருகிறது. உங்கள் ஆசார்ய ஸ்வாமிகள் ஊர் ஊராய்ப் போய் உங்களினத்தவருக்குப் பூணூல் போட்டதாக உங்கள் புராணங் கூறுகிறதே! வக்குவ மரபிலுதித்த உண்மை

யான வைசியர்களாகிய நாங்கள் ஒரு க்ஷணநேரங்கூட பூணூலில்லாதிருந்தது மில்லை; இருக்கிறதுமில்லை; இனி யிருக்கப்போவது மில்லை!

11. மேலே காட்டியவைகளால் என்ன தெரிகிறது என்று நான் விபரமாய் எழுதவேண்டிய அவசியமில்லை. நிற்க. திருநெல்வேலி, திருவனந்தபுரம், திருச்செந்தூர், வேதாரண்யம் முதலிய க்ஷேத்ரங்களில் உள்ள ஆலயங்களுக்குள் **வைசியராகிய** நாங்கள் போகிற அளவுவரை **வாணியராகிய** உங்களை விடுவதில்லையென்பது தெரியாதா? சமீபத்தில் மாயவரம் கோர்ட்டிலும், நாகைப்பட்டினம் கோர்ட்டிலும் வேதாரண்ய ஆலயத்திற்குள் துவஜஸ்தம்பத்தைக்கடந்து நீங்கள் போகக்கூடாது என்று ஏற்பட்டிருக்கும் கோர்ட்டு தீர்ப்பை இங்கு உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். தீர்ப்பு வருமாறு:—

Right of entry into Vedaranyam Temple: Vaniar's appeal dismissed—Negapatam 9th.

"The learned Sub-Judge held that there was no evidence that Vaniars were Vaisyas and that they might be included among 'sudras' even among whom they were considered inferior on account of their occupation of extracting oil from gingelly which *Manu* characterised as sinful............ ."

[Hindu, dated 11—8—1931]

"...........வாணியர் வைசியர்கள்தான் என்று சொல்வதற்குப் போதுமான ருஜுக்கள் காண்பிக்கவில்லையென்றும், எள்ளைப்பிழிந்து எண்ணெய் எடுப்பதாகிய (மனுவால் இகழப்பட்ட) கார்யத்தைச் செய்வதால் தாழ்ந்தவர்களாக அவர்கள் கருதப்படுவது...........".

[சுதேசமித்திரன்—11—8—1931.]

12. 1909-ம் வருடத்தில் மதராஸ் ரிப்பன் அச்சுயந்திரசாலையில் அச்சிட்டுள்ள உலகநாத பண்டிதர் அவர்களால் இயற்றப்பட்ட சாதிபேத விளக்கத்தில் 54-வது

செய்யுளை இங்குக் கவனியுங்கள். இன்னும் அநேக நூல்கள் உண்டு. உதாரணமாகச் சிலவற்றைக் கூறுகிறேன்.

சேக்கு வாணியர்.

"சொற்றிறல் வணிகர் மின்பால் சூத்திரன் சோரந் தன்னில்
பெற்றிடு மைந்தர் தீண்டப் பெருத வாணியர் களாகிப்
பற்றிய வுப்பு விற்பர் பதஞ்செய் தெள்ளாட்டி விற்பர்
உற்றிடு முச்சிக் கப்பால் ஊர்புக வரிய ராவர்.

[குறிப்பு :—நாளது வரையிலும் ஊர்க்குள் உப்பையும், எண்ணெயையும் வாணியர் உச்சிநேரத்திற்குப் பின் விற்பதில்லை யென்பதைக் காணலாம்].

13. 1909-ம் வருடத்தில், ம. மு. சுந்தரஞ் செட்டியாரவர்களால் எழுதி வெளியிட்ட வைசிய குலவிளக்கம் பக்கம் 67 - ல் எழுதியிருப்பதை இங்கு எழுதுகிறேன் :

வாணியர்.

"வாணியர்களை நிகண்டகராதிகளில் செக்காரென்றெழுதியிருப்பதாலும், காந்தம், சூதசம்ஹிதை சிவமான்மிய கண்டம், 12 - வது சுலோகக் கருத்துமதுவாதலாலும், நாயன்மார் புராணங்களிவர்களைத் தைலவினையாளர் என்றமையாலும், திவாகர நிகண்டுகளில் இவர்களைச் சூத்திரருக்குங் கீழாகச் சொல்லியிருப்பதாலும், இவர் மன்னுமாரிஷி கோத்திரத்தாயிரத் தொருவரென்று வழங்கிக் கொள்வதாலும், கம்பர் வேளாளரைச் சிறப்பித்துப் பாடிய,

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே—முட்டிபுகும்
பார்ப்பாரகத்தை யெட்டிப்பாரோமே யெஞ்ஞான்றும்
காப்பாரே வேளாளர் காண்.

இக்கவியில் செட்டிகளென்றும், செக்காரென்றும் வேறு பிரித்திருக்கின்றமையாலும், இவர்கள் வைசியர்களல்லவென்பது பசுமரத்தாணியாம்."

14. இது எம்மவரால் எழுதப்பட்டதென்று நீங்கள் சொல்லுவீர்களாகில் பல வன்னியர்களின் வேண்டுகோளுக்கிணங்கி—குண்ணம்—முனிசாமிப்பிள்ளை யவர்களால், காஞ்சீபுரம் ஸ்ரீ முத்துகச்சீஸ்வர குருக்கள், ஸ்ரீ கு. சின்னசாமி சாஸ்திரியவர்கள் உதவியைக்கொண்டு 1872-ம் வருஷம் ஜூன் மாதத்தில் கவிரஞ்சனி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுள்ள **ஜாதிசங்கிரகத்தைப்** பார்க்கலாம்.

[குறிப்பு :—வாணியர்கள் வரலாற்றை மனுஸ்மிருதி, அருணகிரிப் புராணம், அபிதான சிந்தாமணி முதலிய நூல்களாலறியலா மென்று ஏற்கனவே என் "நிஜவைசிய நிரூபணம்" என்ற பத்திரிகையில் 4-வது பக்கத்தில் விளக்கமா யெழுதி யிருக்கிறேன். அவைகளைப் பார்த்தும், உம்முடைய உண்மை வரலாற்றைத் தெரிந்தும், என்னை அவமதிக்கவெண்ணி, ரா. வேணுகோபால் செட்டியார் அவர்கள் 2-10-31-ல் எழுதி வெளியிட்ட நிஜவைசிய நிரூபணத்தின் கண்டனமென்ற பத்திரிகையின் 14-வது பக்கத்தில், "குலங்கலந்தவ"ரென் றெழுதியிருப்பதை, இதைப் பார்ப்பவர்களே யார் "குலங்கலந்தவர்" என்று தீர்ப்பு சொல்லட்டும்.]

15. இம்மட்டோடு இந்த விஷயங்களை நிறுத்திக்கொண்டு இனிப் புராணங்களையும், சங்கநூல்களையுஞ் சிறிது ஆராய்ச்சி செய்யலாம். அவைகளிலிருந்து நான் எடுத்துக் காட்டிய செய்யுளுக்கும், விஷயங்கட்கும் பொருள் சரியாய்த் தெரிந்துகொள்ளமுடியாமற் போனால் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

பெரிய புராணத்துள் பேசப்பட்ட வைசிய நாயன்மார்கள் ஐவர்களது சரித்திரங்களிலும் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் பிரயோகப்படுத்தியிருக்கும் பதங்களைக் கவனித்துப் பார்க்கவும்.

(1) இயற்பகை நாயனார் புராணம், 2-வதுசெய்யுள்—
"அக்குலப்பதிக் குடிமுதல் **வணிக**ரளவில் செல்வத்து"

(2) அமர்நீதி நாயனர் புராணம், 2-வது செய்யுள்—"மன்னுமப்பதி **வணிகர்** தங்குலத்தினில் வந்தார்"

(3) மூர்த்திநாயனர் புராணம் 8-வது செய்யுள் "அப்பொற்பதிவாழ் **வணிகக்** குலத்தான்றதொன்மை"

(4) காரைக்காலம்மையார் புராணம் 2-வது செய்யுள் "வங்கமலிகடற்காரைக் காலின்கண் வாழ்**வணிகர்** தங்கள் குலத்தலைவனர்".

(5) கலிக்கம்பநாயனர் புராணம் 2-வது செய்யுள் "மற்றப்பதியினிடை வாழும் **வணிகர்** குலத்து வந்துதித்தார்".

16. மேற்கூறிய ஐந்து சரித்ரங்களிலும் '**வணிகர்**' என்றபதத்தைக் கவனியுங்கள். வணிகர் என்றது எங்கள் மரபினராகிய வைசியரைக் குறிக்குமேயொழிய வாணியர்களாகிய உங்களைக்குறிக்காது என்றுதெரிந்துகொள்ளாமல் ஐவர்களையும் உங்கள் வம்சத்தவர் என்று எழுதத் துணிந்தது அறியாமையே என்று எண்ணிவிடுகிறேன். இந்நாயன்மார்களது சரித்ரச் சுருக்கங்களைப் பாடிய ஸ்ரீ உமாபதி சிவாசாரியாரது புராணசாரத்தில் கூறியிருக்கும் பதங்களையுங் கவனிக்கவும்.

(1) "இயல் **வணிக** ரியற்பகையார்"
(2) "பழையாறை **வணிக**ரமர்நீதி"
(3) "மதுரைநகர் மூர்த்தியாராம் **வணிகர்**"
(4) "தங்குபுகழ்க் காரைக்கால்**வணிகன்**"
(5) கடந்தைநகர்**வணிகர்** கலிக்கம்பரன்பர்"

இன்னும் பெரியபுராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணம், 1033-வது செய்யுளில் ஸ்ரீ சேக்கிழார் ஸ்வாமிகள்,

"இன்னதன்மையிற் பிள்ளையா ரிருந்தனரிப்பால்
பன்னுதொல்புகழ்த் திருமயிலாபுரிப்பதியின்

மன்னுசீர்ப் பெருவணிகர் தந்தோன்றலார்திறத்து
முன்னமெய்திய தொன்றினை நிகழ்ந்தவா மொழிவாம்"

என்று வைசியப் பெரியாராகிய சிவநேசரை வணிகர் என்ற பதத்தால் அழைத்திருக்கின்றார்கள். இதைவிட்டு அவரும் எம்மவர் என்று வாய் கூசாமலழைக்க வந்தீரே! அவர் வைசியரேயொழிய வாணியர் அல்லவென்று தெரிந்துகொள்ளுங்கள்.

இவையிப்படியிருக்க, ஸ்ரீ சேக்கிழார் ஸ்வாமிகளும் ஸ்ரீ உமாபதி சிவாசாரியஸ்வாமிகளும், **சேக்கார்** குலத்துத் திருவவதாரஞ் செய்த கலியநாயனாரது சரித்ரத்தை யெப்படியருளிச் செய்திருக்கின்றார்கள் என்றும் ஊன்றிப் பார்க்கவும்.

கலிய நாயனார் புராணம் 5 - 6 செய்யுள்கள்.

" **தயிலவினைத் தொழின்மரபிற்** சக்கரப்பாடித் தெருவு"

" **அக்குலத்தின்** செய்தவத்தால் அவனிமிசையவதரித்தார்
மிக்கபெருஞ் செல்வத்து மீக்கூர விளங்கினார்
தக்கபுகழ்க் கலியனாரெனுநாமந் தலைநின்றார்
முக்கணிறைவர்க் குரிமைத் திருத்தொண்டினெறி முயல்வார்"

ஸ்ரீ உபாபதிசிவாசாரிய ஸ்வாமிகள் புராணசாரம்: " சக்கரப்பாடியர் குலமெய்த்தவமாயுள்ளார்". இவரும் எங்கள் வைசியமரபைச் சேர்ந்தவராகவிருந்தால் இவரையும் ஏன் வணிகர் என்று சொல்லாது விடுத்தனர். அவருக்கு ஜாதி வரலாறு தெரியாதுவிடுத்தனர் என்று சொல்ல நாவெழுமா? தெய்வீகமான வாக்குகளுக்குக் குற்றங்கூறத் தொடங்கினால் மற்றெந்த வாக்குகளிடம் தான் உங்களுக்கு நம்பிக்கையேற்படும்? சேக்கிழார் நாயனார் புராணத்திலும், இன்னின்னஜாதியிற் றிருவவதாரஞ் செய்த நாயன்மார் இன்னின்னார் என்று பாடியிருக்கிற 36-வது செய்யுளில் "**வணிகர்குலத்தைவர்**" என்று எங்கள் மரபினராகிய வைசிய நாயன்மார்கள் ஐவரென்றும், சாலி

யர், குயவர், தயிலவினையாளர்........என்று கலியநாயனுரை யும், 41-வது செய்யுளில் "திலதயிலத் தொழின்மரபிற் கலியனுர்" என்று செக்கார் குலமாகிய வாணியர்குலத் தில் திருவவதாரஞ் செய்த கலியநாயனுர் ஒருவர் என் றும் பாடியிருப்பதைக் கண்டாகிலும், அவர் ஜாதி நிச்சயமாய்த் தெரிந்துகொள்ள முடியாமல் இப்படிப் பொதுவாகப் பாடியிருக்கிருர் என்று அறியாமையால் எழுதியதைப் படிக்க விசனமுண்டாகிறது. உலகத்தி லுள்ள எல்லாச் சாதிகளையுமறிந்து விவரமாகப் பாடி யிருக்கும் புராண ஆசிரியருக்கு ஜாதிவிபரந் தெரியாது என்றெழுதுவது மடமையிலும் மடமையே! இவர் உம் மினத்தவர் அல்லவென்று இப்போது உங்களுடைய புதிய ஆராய்ச்சியில் ஏற்பட்ட விஷயமா? அல்லது பழமையான விஷயமா? பழமையானதென்ருல், நான் முன்னரே மேலே காட்டியிருக்கும் உங்கள் போலி வைசிய புராணத் தில் எதற்காக இந்நாயனுரது திவ்ய சரித்திரத்தைக் "கலி நீதிவாணியர் சருக்கம்" என்றெழுதி வைத்திருக் கிறீர்? வைசிய அடியவராகிய எம்மரபில் தோன்றி யுலகை யுய்வித்த காரைக்காலம்மையாரை ஏன் அப் போது உங்கள் போலிப் புராணத்தில் சேர்க்காது விட்டு இப்போது புதிய ஆராய்ச்சியில் உங்களால் வெளியிடப் பட்டுள்ள துண்டுப் பத்திரிகையில் மட்டுஞ் சேர்த்துக் கொண்டீர்கள்? இது முன்னுக்குப் பின்முரணுகவும் நியா யத்திற்குப் பொருந்தாத தொன்ருகவுமிருக்கவில்லையா? தக்கவர்களைக் கொண்டு உங்கள் புராணத்தையும் நீங்கள் இப்பொழுது வெளியிட்டுள்ள தாறுமாருன பத்திரிகை களிலுள்ள விஷயங்களையு மொன்ருகவைத்து ஆராய்ச்சி செய்து நல்ல முடிவுக்கு வாருங்கள்.

17. சக்கிரி யென்ருல் அது உங்கள் குலப்பெயர் அல்லவென்று சொல்லுகிறீரே. சக்கிரி யென்ருல் குய வன் என்றும் பொருள் கூறி யிருக்கிறீர். சக்கிரி யென்றதற்குக் குயவன் என்று பொருளிருந்தால் சேக் கிழார் சுவாமிகளும், உமாபதி சிவாசாரிய சுவாமி

களும் குயவர் குலத்துத் திருவவதாரஞ் செய்த "திருநீலகண்ட நாயனுர்" சரித்திரத்தோடு ஏன் கலியனுரைச் சேர்க்காது விடுத்தார்? ஜாதிவிபரந் தெரியாமலா? அல்லது மரபு காண்பது அவர்களுக்குச் சந்தேகமாக விருந்தால் மரபறியாத நாயன்மார்களைச் சொன்னவிடத்தில் ஏன் கலியநாயனுரையும் சேர்த்துக் கூறவில்லை? இவ்விஷயங்களைக் கவனித்துப் பார்த்தால் கலிய நாயனுர் வைசியர் குலத்தவரல்லவென்று தெற்றெனப் புலப்படுகிறது! இனியாகிலும் தெளிவாய் உங்கள் ஜாதியின் நிலைமையை யுணர்ந்துகொண்டு வைசியர்கள் என்று சொல்லிக்கொண்டு திரியாதீர்கள்!!

18. காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவரதராஜப் பெருமாளுக்கு ஆலவட்ட கைங்கர்யஞ் செய்து பேறுபெற்ற வைசிய குலத்துதித்த திருக்கச்சிநம்பிகளை எங்கள் மரபினர் என்று உங்கள் போலிப்புராணத்தில் எழுதிக்கொண்டீர்களே? திருக்கச்சிநம்பிகள் எழுந்தருளியிருக்கும் தென்னிந்தியாவிலுள்ள எல்லாத் திருப்பதிகளிலும் ஷ சுவாமிகளுக்கு நடைபெறும் உற்சவங்கள் எம் மரபினராகிய வைசியர்களால் நாளதுவரை செய்யப்பட்டு வருவது உங்களுக்குத் தெரியாதா? எந்த ஒரு சிறு கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் திருக்கச்சி நம்பிகள் உற்சவமாவது வாணியர்களால் எப்பொழுதாவது செய்யப்பட்டதா அல்லது செய்யப்படுகிறதா என்று உங்களால் நிரூபிக்க முடியுமா? இப்படித் திருக்கச்சிநம்பிகளுக்கும் வாணியர்களுக்கும் யாதொருவிதமான சம்பந்தமுமில்லாதிருக்க அவரை வாணியர் வம்சம் என்று எவ்வளவு ஆசையாக உங்கள் புராணத்தில் சேர்த்துக்கொண்டீர்கள்? இது உலக நியாயத்திற்குப் பொருந்துமா?

19. எம்மரபில் உதித்த திருவெண்காட்டடிகளாகிய பட்டினத்துப் பிள்ளையாரை உங்கள் மரபினர் என்று உங்கள் போலிப்புராணத்தில் சேர்த்துக்கொண்டால் உலகத்தவர் ஒப்புவாரா என்பதைச் சற்று யோசித்துச் சேர்க்காது விட்டிருக்கக் கூடாதா?

20. பஞ்சகாவியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் கதாநாயகனாகிய கோவலனை வாணியனென்று கூறமுன் வந்தீர்? "வாணியன், வாணிச்சி அல்லது செட்டி, செட்டிச்சி" என்று கோவலனையாவது கண்ணகியையாவது சங்க நூலாகிய சிலப்பதிகாரத்தில் எங்கும் கூறப்படாதிருந்தாலும், கோவலனை **வணிகன்** என்று கூறப்பட்டிருக்கிறதே அவனை வைசியன் என்று சொல்லப் போதிய சான்றாகும் என்பதை யறியக்கடவீர்கள்.

21. இனி யுங்கள் பத்திரிகை யொன்றில் கம்பநாட்டாழ்வார் என்று எல்லாராலும் கொண்டாடப்படும் கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பரைப் பலவிதமாக மனங்கூசாமல் கைசலிக்காமல் தெரிந்தவரை யெழுதிவிட்டீர்களே? பழைய வித்வான்கள் யாவரும் பொருளுக்காசைப்பட்டவர்களல்ல வென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். ஒருவர் பொருள்கொடுத்தால் அவர் உண்மைக்குணத்தை அதிகமாகப் புகழ்வார்களே யொழிய அவர்களிடமில்லாத விஷயத்தைப்பற்றிச்சொல்லவே மாட்டார்கள் என்று நிச்சயமாய் நம்புங்கள்! தற்காலத்தில் அநேக புராணங்களைக் கூலிக்குப் பாடிக்கொடுக்கும் வித்வான்களைப் போலக் கம்பரை யெண்ணிவிடலாமா? யோசித்துப் பாருங்கள். விரிப்பிற்பெருகும்.

22. உங்களால் வெளியிடப்பட்டுள்ள கடைசிப் பத்திரிகையில் 6-வது பாராவில் "கந்தபுராணம், சூதசம்ஹிதை" .... என்றதலைப்புடன் எமது பத்திரிகையில் 2 செய்யுட்கள் எழுதப்பட்டனவென்றும், அதன் ஆசிரியரைக் கச்சியப்பசிவாச்சாரியர் என்றும் நீங்கள் நினைத்துக்கொண்டு எழுதத்துணிந்தது உங்கள் கல்வி கேள்வி வாசனையை யுலகத்தவருக்கு நன்கு காட்டிவிட்டது. எமது பத்திரிகையில் "காந்தம்" என்று எழுதியிருக்கிறதே யொழிய கந்தபுராணமென்று எழுதவில்லை. "காந்தம்" வேறு, "கந்தபுராணம்" வேறு என்றும், காந்தம் வடமொழிக் கிரந்தமென்றும், கந்தபுராணம் தென்மொழி

நூல் என்றும், முன்னதன் ஆசிரியர் பரமேஸ்வரன் என்றும் பின்னதன் ஆசிரியர் கச்சியப்பசிவாசாரிய ஸ்வாமிகள் என்றும், அறியக்கடவீர்கள்.

23. அதில் "ஊருவி நாயகர்" என்ற பதத்தை "ஊருவினுய்கர்" என்று திருத்தி வாசித்துக்கொண்டால் "ஊருவில்தொடையில்" என்று பொருள்படும். இது ஒரு அச்சுப்பிழை. இதையொரு குற்றமாக எடுத்து உங்கள் பத்திரிகையில் காட்டியது அழகாகுமா? இதுபோன்ற அநேக அச்சுப்பிழைகளை உங்களால்வெளியிடப்பட்டுள்ள பல பத்திரிகைகளில் கண்டேன். அவற்றை யெடுத்துக் காட்டப்புகுந்தால் அது "மணற்சோற்றுள் கல்லாராய்வது" போலிருக்குமென்று அவற்றை நான் எடுத்துக் காட்டாது விடுத்தனன். நிற்க.

24. கடைசியாகவும், தீர்ந்த முடிவாகவும் ஒரு விஷயத்தை யெழுதி எமது கண்டனத்தைப் பூர்த்திசெய்து கொள்ளுகிறேன். அதாவது நான் மேலே காட்டியுள்ள விஷயங்களாலும், உதாரணங்களாலும், நாங்கள்தான் **மூன்றுங் குடித்தலைவர் என்றும், வைசியர் என்றும், வக்குவ மரபினர் என்றும், தசாங்க விருதுடையவரென்றும், ஆயிரங் கோத்திரத்தவரென்றும்,** உள்ளங்கை நெல்லிக்கனிபோலவும், பசுமரத்தாணிபோலவும், வஜ்ரஸ்தம்பம்போலவும் நிரூபித்தாயிற்று. இதை மறுக்க வாணியராகிய உங்களால் இனி முடியாது என்று நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளுங்கள். இனியுங்கள் குப்பை மூட்டைகளையெல்லாம் பத்திரமாக இறுகக்கட்டி யொருபுறமாய் ஒதுக்கி வையுங்கள். பத்திரிகைகளில் நீங்கள்தான் வைசியர்கள் என்று வீணுய் எழுதுவதாலும், வாய்ப்பேச்சினுலும் நீங்கள் வக்குவ மரபில்வந்த வணிக வைசியர்கள் ஆபிரவர்களாவீர்களா? உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? ஒருபோதும் ஆகமாட்டீர்கள் என்று தெரிந்துகொள்ளுங்கள். தக்கவிடத்தில் உங்களை வைசியர்கள் என்று நிரூபித்துக்கொண்டு உங்கள் பெருமையை

நிலைநிறுத்திக் கொள்ளுங்கள். இச்சமயம் தவறினல் வேறு சமயம் வாய்க்காது என்றும் தெரிந்து கொள்ளுங்கள். இன்னும் அவகாசமும் சந்தர்ப்பமும் நேர்ந்தால் வேண்டுவன எழுதுவேன். இத்துடன் எமது கண்டனத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறேன்.

[குறிப்பு: இம்மாதிரியான உங்கள் வீண் விவாதத்தால் உங்கள் மரபைச்சேர்ந்த கல்விமான்களுக்கும், தக்க பெரியோர்களுக்கும் குறைவு ஏற்படுகின்றதென்பதைக் கவனித்து விசனப்படுகிறேன். இனி உங்களால் வெளியிடப்படும் சாரமற்ற பத்திரிகைகளுக்கு நான் யாதொரு விதமான பதிலையும் எழுதமாட்டேன் என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்.]

"உண்மை நிலை நிற்கும்" "பொய் நிலை பெறுது"

இங்ஙனம்,
ஓங்கூர்.
சீ. இரத்தின செட்டியார்,
தமிழ் உபாத்தியாயர், திண்டிவனம்.

21, நைனியப்ப மேஸ்திரி தெரு, பார்க்டவுன், சென்னை 10—10—31.

Kesari Printing Works, Madras.